## .மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
## அசல் வழக்கு எண்.116/2019

PW2 –நாகராஜன், த/பெ. குப்பு
நாள்–28.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்க தெரியுமா என்றால் பாலச்சுந்தரம் சுந்தரபாண்டியன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 280 குழியாகும். தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் உடன் பிறந்த சகோதரர் ஆவார்.

தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்கு சொந்தமாக இருந்தது என்றால் பெருமாள் என்பவருக்கு சொந்தமாக இருந்தது. பெருமாள் என்பவரின் மகன்தான் கலியமூர்தி என்றால் சரிதான். கலியமூர்தியின் மகன்தான் 1–ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா சொத்தை பெருமாள் சாகுபடி செய்துவந்தார் என்றால் சரிதாான். தாவா சொத்து பெருமாளுக்கு நில உச்ச வரம்பு சட்டத்தின்படி வழங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்கான சீலிங் தொகையை பெருமாள் செலுத்தி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெருமாளின் இறப்பிற்கு பிறகு கலியமூர்த்தி தான் தாவா சொத்தை அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். கலியமூர்தி இறந்துவிட்டார் என்றால் சரிதான். கலியமூர்தியின் இறப்பிற்கு பிறகு 1, 2 பிரதிவாதிகள்தான் உரிமையுடன் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பெருமாளுக்கு பாப்பாத்தி என்ற

மகள் உண்டு என்றால் சரிதான். சுந்தரபாண்டியனின் சகோதரி ரேவதி என்றாலும் சரிதான். தாவா சொத்திற்கான சீலிங் தொகையை சுந்தரபாண்டியன் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியரிடம் சுந்தரபாண்டியன் தாவா சொத்திற்கான தீர்வு சான்று பெற்றுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்படபடும் ஆவணம் என்னவெண்றால் வாதிக்கு 1–ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தமாகும். அது ஏற்கனவே வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 2002–ம் ஆண்டாகும்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1–ன் முதல் பக்கத்தில் யாருடைய கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த சொத்தை பொறுத்து எழுதப்படுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்கு மூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் படித்து காண்பித்துதான் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அதனால் எனக்கு தெரியும். தாவா சொத்து 12 ஆண்டுகளுக்கு முன்பே வாதியின் வசத்தில் வாய்மொழி குத்தகையில் இருந்து வருவதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

கலியமூர்த்தி வாதியிடம் அடகு வைத்திருந்தார். எப்போது தாவா சொத்தை கலியமூர்த்தி வாதியிடம் அடகு வைத்திருந்தார் என்றால் சுமார் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு. தாவா சொத்தை கலியமூர்த்தி வாதியிடம் அடகும் வைக்கவில்லை, குத்தகைக்கும் விடவில்லை என்றாலும் சரியல்ல. கிரய தொகையை வாதியிடமிருந்து கலியமூர்த்தி பெற்றுகொண்டதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கலியமூர்த்தி வாதியின் வசம் விடவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் கையொபப்பமிட்டுள்ளார்கள் என்றால் என்னுடைய கையொப்பம் மட்டும்தான் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1–ஐ யார் எழுதியது என்றால் சாமிதுரை என்பவர்

எழுதினார். சாமிதுரை எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் ஜுவா நகரை சேரந்தவர். சாமிதுரை ஊரில் உள்ளாரா என்றால் உள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதச்சொல்லி யார் சாமிதுரையிடம் சொன்னது என்றால் வாதி பாலசுந்தரம். என்ன ஆவணம் கொடுத்து எழுத சொன்னார் என்றால் 20 ரூபாய் முத்திரை தாள் கொடுத்து கிரய தொகை சொல்லி அதை எழுதச்சொன்னார். வா.சா.ஆ.1 எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வாதியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. என்னை யார் அழைத்தார்கள் என்றால் எனது சகோதரர் தான் என்னை அழைத்தார்.

வா.சா.ஆ.1 எழுதிய தேதி மற்றும் மாதம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1–ஐ எழுத முத்திரை தாள் யார் வாங்கி வந்தது என்றால் வாதி பாலசுந்தரம்தான். முத்திரைதாள் என்றைக்கு வாங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் 3 மணி இருக்கும். அப்போது யார் யார் அங்கு இருந்தார்கள் என்றால் கலியமூர்த்தி, சுந்தரபாண்டியன், அவரது மனைவி, வாதி பாலசுந்தரம், வடிவழகன், திருமலை மற்றும் ஜெயராமண் ஆகியோர்கள் இருந்தார்கள். மேற்படியார்கள் இருந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆனது கலியமூர்த்தி, சுந்தரபாண்டியன், சாரதாம்பாள் ஆகியோர்களால் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும் வழக்கிற்காக வாதியால் தயார் செய்யப்பட்டதும் என்றால் சரியல்ல. நான் வாதியின் உடன் பிறந்த சகோதரர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதிற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**